Regd. No M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்துஸு பங்குனிமீ 23வ 5—4—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலவ்வல்மீ 24வ திங்கட்கிழமை. } இதழ் 11.

## குறை கூறும் அன்பர்களுக்கு

"இன்று பாகிஸ்தான் ஏற்பட்டு விட்டது இனி அதை எதிர்த்துக் கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லே. எனவே இனியாகிலும் பாகிஸ்தான் எதிர்ப்பை கைவிடமாட்டீர்களா? என்று சில லீக் அன்பர்கள் கேட்கின்றனர்.

பாகிஸ்தான் ஏற்பட்டிருப்பது நமக்கும் தெரியும். அது ஏற்படுவதற்கு முன்பே பாகிஸ்தான் எப்படி இருக்கும், அதன் விளைவுகள் என்னமா யிருக்கும் என்றும் நமக்குத்தெரிந்தே இருந்தது. அன்றிலிருந்தே அதைச் சொல்லியும் வருகிறோம். அன்று நாம் சொல்லி வந்ததெல்லாம் இன்று நிரூபணமாகி விட்டது. பாகிஸ்தான் பலம் பெற்று முன்னேற்றமடைவதற்கு முட்டுக்கட்டை போட நாம் விரும்பவில்லை. அது அவசியமுமில்லை. பாகிஸ்தான் அடைய முயற்சித்தவர்களிடமே பாகிஸ்தான் இருந்து வருகின்றது. அதன் முன்னேற்றமும் அழிவும் அவர்கள் நடத்தையைப் பொருத்தே இருக்கிறது. நம்முடைய எதிர்ப்பும் ஆதரவும் பாகிஸ்தானை அழிக்கவோ, முன்னேற்றவோ முடியாது. பாகிஸ்தான் கர்த்தாக்கள் எப்படியோ போகட்டும். நம்முடைய பிரச்னைகளில் தலையிட வேண்டாமென்றுதான் கேட்கிறோம். இரக்கப்படுவதோ நமக்காக பரிந்து பேசுவதோ விட்டு நம்வழியே நம்மை விடுங்கள் என்று எச்சரிக்க நமக்கு உரிமை நிச்சயம் உண்டு.

பாகிஸ்தான் ஏற்பட்டதால் இந்திய முஸல்மான்கள் அடைந்த அதிர்ச்சி பலதலைமுறைகள் வரை நீங்காதென்பதை யாரும் மறுக்கமுடியாது. பாகிஸ்தானல் பாதிக்கப்பட்ட இந்தியமுஸல்மான்களின் நிலைமை ஒருக்கால் என்றுமே திருந்த முடியாமலும் போகலாம்.

கோடைகாலம் ஆரம்பித்துவிட்டது

Truthful READY MADE CLOTHES

லேசான துணிகளில் தயாரிக்கப்பட்ட

"ட்ரூத்புல்"

—: ரெடிமேட் ஆடைகளை :—

அணிந்து ஆனந்தம் அடையுங்கள்.

எங்கும் ஒரே விலை

ட்ருத்புல் மான்யூபாக்சரிங்

கம்பெனி லிமிடெட், மதுரை.

பாகிஸ்தான் விளைவுகள் இவ்வளவு பயங்கரத் தன்மை வாய்ந்தவையாக இருக்குமென்று எப்பொழுதாகிலும் லீக் அன்பர்கள் நினைத்ததுண்டா? இதற்கெல்லாம் மூலக்காரணம் யார் என்று அவர்கள் சிந்தித்துத்தான் பார்த்தார்களா? நேற்று வரை மைனாரிடி முஸ்லிம்களாகிய எங்களின் பிரதிநிதித்வ பாத்தியதை கொண்டாடியவர்கள் எங்கு மறைந்தனர்? பாதிக்கப்பட்ட முஸல்மான்களுக்கு அவர்கள் சேவைசெய்ய ஏன் முன்வரவில்லை? இந்த அளவுக்கு சுயநலக்காரர்களாக இருப்பார்கள் என்று எப்பொழுதாகிலும் லீக் அன்பர்கள் அவர்களை சந்தேகித்ததுண்டா? மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத் போன்ற தலைவர்களை கேவலப் படுத்தி லீக் பத்திரிகைகள் எழுதிவந்ததையும் லீக்லீடர்கள் தேசிய, சமூகத்தலைவர்களை இழிவாகப் பேசி பரிகாசம் செய்துகொண்டிருந்ததையும் அதற்குள் லீக் அன்பர்கள் மறந்திருக்க முடியாது.

பத்துகோடி முஸ்லிம்களுக்காக பாகிஸ்தான் என்று சொல்லப்பட்டது. இந்தியாவில் முஸ்லிம்கள் மைனாரிடியாக இருந்தால் பாகிஸ்தானில் ஹிந்துக்கள் மைனாரிடியாக இருப்பார்கள். இந்தியாவில் நடப்பதற்கு பாகிஸ்தானில் பதில் நடவடிக்கை எடுக்கப்படும். என்று பேசி வந்ததையும் லீக் அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு தனித்தனி சமுதாயங்கள். அவர்கள் ஒன்று சேர முடியாது என்று சொல்லி வந்ததும் மறந்திருப்பதற்கில்லை. ஆனால் பாகிஸ்தானால் நடந்ததென்ன? பயங்கரமான, நாசகரமான அழிவுக்கு சமூகமே இலக்காகிவிட்டது. இன்றைக்கும் பாகிஸ்தான் உதவி செய்யுமென்ற தவறான நம்பிக்கை லீகர்களுக்கு இல்லைஎன்று லீக் அன்பர்கள் சொல்லமுடியுமா? அவர்கள் இரண்டு சமுதாயக் கொள்கையைத்தான் விட்டு விட்டனரா? பத்துவருஷ காலமாக ஊட்டப்பட்ட விஷத்தின் தீய குணந்தான் அகன்றுவிட்டதா? இன்றைக்கும் இரவு நேரங்களில் ஆவலுடன் பாகிஸ்தான் ரேடியோவை அவர்கள் கேட்பதில்லையா? இந்திய எல்லைக்கு அப்பால் அவர்களுக்கு கண்ணோட்டம் இல்லையா? இன்றைக்கும் பாகிஸ்தான் மேலிடத்து உத்திரவுகளுக்கிணங்க இங்குள்ள சில பேர்வழிகள் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கவில்லையா? சமீபத்தில் பாகிஸ்தான் ரேடியோவில் பேசும்பொழுது மிஸ்டர் கஸன்பர் அலி, தங்களுடைய உயிர்களை பணயம் வைத்து முஸல்மான்கள் இந்தியாவில் இருந்துவர வசதி செய்த இந்திய தேசிய முஸல்மான்களை தாக்கிப் பேசவில்லையா?

முஸ்லிம்களின் இன்றைய கஷ்டங்களுக்கெல்லாம் பாகிஸ்தானும் அதன் பொருப்பற்ற சுயநலக்கார தலைவர்களுமே காரணமென்பதை அடிக்கடி பலதுறைகளிலும் எடுத்துச் சொல்லி முஸ்லிம்களின் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டியது அவசியம் என்று நினைக்கிறோம். இன்றைய நிலைமைக்கு காரணமான கடந்த கால தவறுகளை எண்ணிப் பார்த்து எதிர்காலத்தை நிர்ணயிப்பதே புத்திசாலித்தனம். இந்தியாவில் வருங்காலத்தில் இஸ்லாம் நிலைத்திருக்க வேண்டுமெனில் இந்திய முஸல்மான்கள் கடந்த கால தவறுகளை உணர்ந்து எதிர்கால வேலைதிட்டத்தை உருவாக்க வேண்டும். சமய சந்தர்ப்பத்தின் அவசியத்தை உணர்ந்து அவர்கள் எதிர்கால புதிய அச்சில் தங்களை வார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வித விஷயங்கள் விவாதிக்கப் படுகையில் முஸ்லிம் லீகும், லீக் லீடர்களும், பாகிஸ்தானும் பிரஸ்தாபிக்கப்படாமல் இருப்பது சாத்தியமில்லை. லீக் போதை தலையை விட்டு இறங்காமல், பாகிஸ்தான் மோகம் உள்ளத்தை விட்டு அகலாமல் இருக்கும் லீக் அன்பர்கள் அதை பாகிஸ்தான் எதிர்ப்பாக எடுத்துக் கொள்ளுகின்றனர். அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. எதுவரையில் இந்திய முஸல்மான்கள் தங்களுடைய பழைய போக்கை மாற்றிக்கொண்டு முஸ்லிம் லீகை குழிதோண்டி புதைத்துவிட்டனர் என்று நமக்கு நம்பிக்கை ஏற்படவில்லையோ அதுவரையில் நம்முடைய கடமையைச் செய்தே வருவோம். இந்தியாவெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் கூட்டங்களைக் கூட்டி ஒருசிலர் செய்யும் விஷமத்தனத்தைக் கண்டித்து முஸ்லிம்லீகை உடனடியாக கலைக்க வேண்டும் என்ற தீர்மானங்களை நிறைவேற்றி முஸ்லிம் லீகிடம் தங்களுக்குள்ள வெறுப்பை உலகுக்கு எடுத்துக் காட்டுவதில்லையோ அது வரையில் நாமும் சும்மாயிருக்க முடியாது. நாட்டை துண்டாடி முஸ்லிம் சமூகத்தை பாழாக்கி இஸ்லாமிய கௌரவத்திற்கு களங்கம் உண்டுபண்ணி முஸ்லிம்கள் என்ற மாத்திரத்திலேயே மக்கள் வெறுக்கும்படி செய்துவிட்ட முஸ்லிம் லீக்நீடித்திருக்குமென ஒருசில சுயநலமிகள் தீர்மானித்திருக்கையில் புனிதமான நம்முடைய வேலையை 'கைவிட மாட்டீர்களா' என்று கேட்பது சரியல்ல. லீக் இருக்கும் வரையில் நாம் சும்மா இருக்கமாட்டோம், இன்று சவக்குழியில் வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் லீக் பிணத்தை மண்ணைத்தள்ளி மூடும்வரையில் நம்முடைய புனிதப் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கும். பாகிஸ்தான் விளைவுகளையும் லீக் லீடர்களையும் அவர்களுடைய சுயநலத்தையும் எடுத்துச் சொல்லாமலிருக்க முடியாது.

# இந்தியாவும், பாகிஸ்தானும்

## பண்டித நேருவின் உறுதி.

“முஸ்லிம் அல்லாதார் திரும்பி வருவதை பாகிஸ்தான் அனுமதிக்காமல் இருக்கையில், அங்கிருந்து திரும்பிவரும் முஸ்லிம்களுக்காக, இந்தியக் கதவு திறந்து வைக்கப்படுமா?” என்ற கேள்விக்கு, இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, இந்திய பார்லிமெண்டில், “மகாத்மா காந்திஜியின் மரணத்திற்கு சில தினங்களுக்கு முன், இந்திய முஸல்மான்கள் திரும்பி வருவதைக் குறித்து, நாம் அவருக்கு அளித்திருந்த வாக்குறுதிகளை, நான் இச்சபைக்கு ஞாபகமூட்டுகிறேன். அந்த வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி வைப்போம். பாகிஸ்தான் எப்படி நடந்து கொண்டாலும் சரி, நாம் மகாத்மாவை பின்பற்ற வேண்டுமே யல்லாது பாகிஸ்தானையல்ல” என்று பதிலளித்தார்.

மேற்கண்ட வார்த்தைகளில் பிரதிபலிக்கும் பண்டித நேருவின் சீரிய உணர்ச்சியும், தூய்மையான எண்ணமும், சந்தேகமற, ஜனநாயக தத்துவத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். அதை கௌரவிக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

மகாத்மாஜி ஆத்மீகத் தியாகம் செய்த லட்சியங்களில் டில்லியில் முஸ்லிம்களை மீண்டும் குடியேற்றுவதும், அவர்கள் திரும்பிவருவதற்கு வசதி செய்து கொடுப்பதும் ஒன்று. மகாத்மாவின் புனிதமான இக் கோரிக்கைக்கு, சகிப்புத்தன்மை, சமத்துவத்தின் சரித்திரத்திலேயே சான்று கிடையாது. முஸ்லிம்களை திரும்ப அழைத்து டில்லியில் அவர்களை குடியேற்றுங்கள். அவர்கள் திரும்பிவருவதை தடுக்க வேண்டாம் என்று மகாத்மா வேண்டினார். நான், நீ என்ற வேறுபாட்டை தகர்த்து, மனிதன், மானிட மேம்பாட்டின் உன்னத சிகரத்தை அடையாதவரை, அவனுடைய உள்ளத்திலிருந்து, இவ்வித வார்த்தைகளும், உணர்ச்சிகளும் பொங்கி எழுவது சாத்தியமே இல்லை. சேவையின் இவ்வித உன்னத நிலையை ஒரு மனிதன் சொந்த முயற்சியால் பெற முடியாது. முற்றிலும் துறந்த ஞானி மகாத்மாவின் போதனைகள் தத்துவங்களாக பேசப் படுவதற்கு மட்டு மல்ல. இந்திய சர்க்காரின் கொள்கை அதுவாக இருக்க வேண்டுமென்றே மகாத்மா விரும்பினார்.

மகாத்மாஜியின் உள்ளத்தை அப்படியே உணர்ந்தவர் பண்டித ஜவஹர்லால். பாகிஸ்தானை பார்க்க வேண்டாம். மகாத்மாஜியின் சீரிய போதனைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அவைகளைப் பூர்த்தி செய்ய நாம் வாக்குறுதி யளித்துள்ளோம். திரும்பிவர விரும்பும் முஸ்லிம்களுக்காக இந்தியாவின் கதவு திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது என்று பண்டித ஜவஹர்லால் நேரு பட்டவர்த்தனமாக அறிவித்ததை நாம் மனப்பூர்வ்மாக வரவேற்கின்றோம். ஹிருதய பூர்வமாக அவரை கௌரவிக்கின்றோம். பண்டிதரின் உயரிய நோக்கங்கள் வெற்றியடைய பிரார்த்திக்கின்றோம். இனி மகாத்மா காந்தியின் ஆத்மா சாந்தியடைந்து அவருடைய ஆத்ம சக்தி நமக்கு வழிகாட்டும் என நம்புகிறோம்.

பாகிஸ்தானிலிருந்து திருப்பி வருபவர்களுக்கு இந்தியா இடமளிக்கும் என்று சொல்லுவது வெளிப்படையாக சாதாரணமானதொரு விஷயமாக தென்படினும், அந்த சாதாரண வார்த்தைகளுக்குள்ளே தான் ஜனநாயகத்தின் ஜீவன் வியாபித்திருக்கின்றது. சமுதாய பிரதிநிதித்வ சுமையை சுமப்பது எவ்வளவு கடினமான வேலை என்பதை பண்டித ஜவஹர்லாலின் பிரகடனம் எடுத்துக் காட்டுவதா யிருக்கின்றது. அதற்காக எந்த அளவு உணர்ச்சிகளை ஒருவன் பலியிட வேண்டி யிருக்கும் என்பதற்கு பண்டித நேருவைப் பார்த்தாலே போதும்.

பண்டிதரின் பிரகடனத்திற்குப் பிறகு பாகிஸ்தானை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் பேர்வழிகள் நிம்மதியாக மூச்சு விடுவார்கள், அகதிகள் விஷயத்தில் அரசாங்கத்துக்கிருந்த சுமையும் தொல்லையும் ஓரளவு நீங்கி விமோசனம் கிடைக்குமென்றும் எண்ணுவார்கள். ஆனால் மிஸ்டர் ஜின்னா கோஷ்டியாரை நாம் எச்சரிக்க விரும்புகிறோம். நீசத்தனத்திற்கு பதில் நேர்மையும், அக்ரமத்திற்கு பதில் சகிப்புத்தன்மையும் அதிக நாள் காட்டப்படமுடியாது இந்திய முஸல்மான்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், வெட்கித் தலை குனியாமல் கவுரவத்துடன் இந்திய முஸல்மான்கள் இருக்க வேண்டுமென்று அவர்கள் எண்ணினால் முஸ்லிம் அல்லா

(5-ம் பக்கம் பார்க்க.)

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 5—4—'48 திங்கட்கிழமை { இதழ் 11.


## வீண் சந்தேகம் என்?

பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்கள் திரும்பி வருவதாகச் செய்திகள் கிடைத்து வருகின்றன. இது உண்மையானால் மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயமாகும். அதற்குள் சில பத்திரிகைகள் அவர்களின் வருகையை ஆட்சேபித்து பத்தி பத்தியாக எழுத ஆரம்பித்து விட்டன. இந்திய பார்லிமெண்டிலும் இந்த பிரச்னை எழுப்பப்பட்டது. இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு பரந்த மனோபாவத்துடன் பதிலளித்தார். பண்டிதரின் உறுதியையும், நேர்மையையும் நாம் பாராட்டுகிறோம். அதே சமயத்தில் தேசீய போர்வையிலிருக்கும் சில அபாயகரமான வகுப்பு வாதிகளைக்குறித்து நாம் வருந்தாமலிருக்க முடியாது. பாகிஸ்தான் எப்படி நடந்துகொண்டாலும் அதனால் இந்தியா தன்னுடைய உயரிய போக்கை விட முடியாதென்று இந்திய யூனியன் சார்பில் அடிக்கடி உறுதி அளிக்கப் பட்டிருக்கிறது. பாகிஸ்தான் போக்கின் எதிரொலிக்கு இலக்காகி துன்பப்பட்டு இங்கிருந்து ஓடியவர்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் தலை மறைக்கவும் பாகிஸ்தானில் வசதி செய்துகொடுக்கப்படவில்லை என்ற கேவலத்தை விட பாகிஸ்தானின் இழிவுக்கு வேறு அத்தாட்சி ஒன்றும் தேவையில்லை. எல்லாவற்றையும் இழந்து பாகிஸ்தானுக்குச் சென்று பாகிஸ்தான் லட்சணத்தை பிரத்தியட்சமாய் பார்த்து வெறுத்து திரும்பிவருபவர்கள் இந்தியாவிடம் விசுவாசமாய் இருக்கமாட்டார்கள் என்று சந்தேகிக்க இடமிருப்பதாக நமக்குத்தெரியவில்லை. வருபவர்கள் தங்கள் விசுவாசத்தை நிரூபித்துக்காட்ட வேண்டுமென சில பத்திரிகைகள் எழுதுவதைப் பார்த்து நாம் வருந்தாமலிருக்க முடியாது. அவர்களில் சிலருக்கு இந்தியாவிடம் விசுவாசம் உண்மையாகவே இருக்கிறதா என்பது சந்தேகந்தான். உதாரணமாக விசுவாசத்தை நிரூபித்துக்காட்ட சில நிபந்தனைகள் 'பிரபாத்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. 'பிரபாத்' ஆசிரியர் லாலாநானக் சந்த் சேவக் சங்க நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டு சமீபத்தில் விடுதலையானார். இவர் மற்றவர்களின் விசுவாசத்தை சந்தேகிக்கும் அளவுக்கு விசுவாசியாக மாறிவிட்டதுதான் ஆச்சரியமாயிருக்கின்றது. விசுவாசத்தை நிரூபித்துக் காட்ட வேண்டுமென்றால் முதலில் 'பிரபாத்' ஆசிரியர்தான் அதைச் செய்யவேண்டும். பாகிஸ்தானிலிருந்து வெளியேறிவந்த அகதிகளைவிட பாகிஸ்தானுக்குச்சென்று திரும்பிவரும் முஸ்லிம்கள் இந்தியாவிடம் அதிக விசுவாசிகளாக இருக்கமுடியும் என்பதே நம் முடிவு. பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் இஷ்டப்பூர்வமாக சென்றவர்கள் அல்ல. தேசத்தை விட்டு பரதேசிகளாக போகும்படி அவர்கள் சூழ்நிலையால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடியவர்கள் இன்று உயிருக்கு அபாயமில்லை என்று தெரிந்த பிறகு திரும்பி வருகின்றனர். அவர்களைப் பொருத்தவரையில் விசுவாசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தவிர விசுவாசம் முஸ்லிம்களுக்கு மட்டும்தான் ஊட்டப்படவேண்டுமா ? முஸ்லிம் அல்லாதாருக்கு விசுவாசம் தேவையில்லையா ? என்று கேட்காமலிருக்க முடியாது. இந்திய யூனியன் சர்க்காரை பலஹீனப்படுத்தும் வேலையில் முனைந்திருப்பவர்கள் தங்களுடைய குற்றங்களை மறைப்பதற்காக மற்றவர்களின் விசுவாசத்தை சந்தேகிக்கும் விசுவாசிகளாக நடிக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். இல்லையேல் பண்டித ஜவஹர்லால்நேருவின் முடிவுக்கு எதிராக இவர்கள் விதண்டாவாதங்களை கிளப்பிவிடுவதன் அர்த்தமென்ன ? முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் முட்டாள்தனமாக பாகிஸ்தானை ஆதரித்தனர் என்பதை நாம் மறைக்க விரும்பவில்லை. அதற்காக அவர்களை இந்தியாவில் இருக்க அனுமதிக்கக்கூடாதென்றோ அல்லது பாகிஸ்தான் ஏற்படுவதை ஆதரிக்காமல் இருந்த முஸ்லிம் அல்லாதாரை பாகிஸ்தானி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாருக்காக பாகிஸ்தான் கதவுகள் திறக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையோருடன் நேர்மையாக நடந்து அவர்களை தங்கள் கண்ணாக பாவித்து பாதுகாக்க வேண்டும். பாகிஸ்தான் சிறுபான்மையோர் எந்த அளவுக்கு சுதந்திரமாகவும் சுபிட்சமாகவும் வாழ முடியுமோ அந்த அளவுக்குத் தான் இந்திய முஸல்மான்களும் வாழமுடியும். பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதார் நிம்மதியாக சந்தோஷ வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து இந்திய முஸல்மான்களாகிய நாம் ஆனந்தக் கூத்தாடுவோம். நாம் மட்டுமின்றி நம்முடைய எதிர்கால சந்ததிகள் இந்த நாட்டில் எப்பொழுதும் போல் நிம்மதியாக இருக்கமுடியும்.

இங்கு இந்திய சர்க்கார் தன்னுடைய ஜனநாயக தாராள மனப்பான்மையை பிரகடனம் செய்து விட்டது. அங்கு பாகிஸ்தான் கொள்கை என்ன என்றும் முஸ்லிம் அல்லாதாரைக்குறித்து பாகிஸ்தான் என்ன செய்ய விரும்புகின்றது என்றும் தெரியவில்லை.

மேற்கு பஞ்சாப் கவர்னர் வெளியிட்ட அறிக்கையில் "அகதிகள் திரும்பி வருகின்றார்கள் என்ற வதந்திகள் இங்கு அமைதியைக் குலைக்க காரணமாக இருக்கின்றன" என்று கூறியிருப்பது வெட்கப்படத் தக்க, பரிதபிக்கத்தக்க முட்டாள்தனமாகும். நாலரை கோடி இந்திய முஸல்மான்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடியதாகும். ஏனெனில் அதன் விளைவுகளை தாங்கள் அனுபவிக்க வேண்டி யிருக்கும் என்பதை அவர்கள் உணருகின்றனர். வருபவர்களுக்கு கதவு திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது என்ற பண்டித நேருவின் கண்ணியமான பிரகடனம் எங்கே? திரும்பி வருபவர்களுக்கு வசதியில்லை என்ற சர். மோடியின் யோக்கியப் பொறுப்பற்ற அறிக்கை எங்கே?

மீண்டும் குடியேற்றும் பிரச்னை ஒருபுற மிருக்க கிழக்கு வங்காளம் சிந்துவிலுள்ள முஸ்லிம் அல்லாதாரும் வெளியேறி நம்முடைய முகத்தில் கரியைத் தடவி பாகிஸ்தானை தெய்வ தண்டனைக்கு உள்ளாக்கி விடுவார்களோ என்றும் அஞ்சவேண்டியிருக்கின்றது.

நெருக்கடியான இக் கட்டத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் அல்லாதாரை அன்பினால் இறுக ஆலிங்கனம் செய்து நம்பிக்கை ஊட்டி அவர்கள் வெளியேறுமல் இருக்கும்படி செய்யா விட்டால் அதன் அரசியல் கலாசாரம் மாண்டு மடிந்து நிரந்தரமாய் கேவலத்தின் படு குழியில் புதைக்கப் படுமென்பது நிச்சயம். அதிலிருந்து தப்ப அற்புதங்கள் எதுவும் அவசியமில்லை. பொறுப்புணர்ச்சி மட்டுமே தேவை. நேர்மையாக நடப்பதன் மூலம் முஸ்லிம் அல்லாதார் திருப்தியடையும் வகையில் சூழ்நிலை மாறவேண்டும். அதன் பிறகு வீடு வாசல்களை இழந்து சொந்த நாட்டை விட்டு வெளியேறி பரதேசிகளாக அலைய ஒருவரும் விரும்ப மாட்டார்கள். இந்திய பிரதமர் பண்டித நேரு பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானுக்கு அனுப்பியிருக்கும் தந்தியில் கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம் நேஷனல் கார்டைச் சேர்ந்தவர்கள், சர்க்கார் அதிகாரிகளின் போக்கால் அங்குள்ள முஸ்லிம் அல்லாதார் பீதி அடைந்திருப்பதாகவும் நிம்மதியாக அவர்கள் அங்கேயே இருந்து வருவது சாத்தியமாகும் வரையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் எச்சரித்திருக்கிறார். இது கொஞ்சமேனும் உண்மையாக இருந்தால் பாகிஸ்தான் நிர்வாகம் அரபிக் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொள்ள வேண்டும். வெட்கக் கேட்டிற்கும், நெஞ்சழுத்தத்திற்கும், பொறுப்பற்ற தன்மைக்கும் ஒரு எல்லையுண்டு. பாகிஸ்தானில் போதுமான அளவுக்கு அது இருப்பதாகத் தெரிகின்றது. பாகிஸ்தான் தன்னுடைய நாசகரமான போக்கை மாற்றிக்கொண்டு ஹிந்துக்களை நிர்ப்பந்திக்கும் தொழிலை கைவிடவில்லை என்றால் இந்திய நாலரை கோடி முஸ்லிம்கள் நசுக்கப்படுவர், அழிவர் என்பதை மிஸ்டர் ஜின்னா, மிஸ்டர் லியாகத் அலிகான், மிஸ்டர் நாஜிமுத்தீனுக்கு ஞாபக மூட்டுகின்றோம். எச்சரிக்கின்றோம்.

பாகிஸ்தான் மந்திரிகள் சிறுபான்மையோரை காக்கும் கடமையில் தவறினால், மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி விடுத்திருக்கும் உருக்கமான வேண்டுகோளுக்கிணங்க பாகிஸ்தான் உலமாக்கள் அந்த கடமையை செய்ய முன்வரும்படி வேண்டுகிறோம். இது இஸ்லாமின் கோரிக்கை, நியாயத்தின் அறைகூவல். நாலு கோடி முஸ்லிம்களின் உடைந்த உள்ளங்களிலிருந்து வெளிவரும் வேண்டுகோளாகும்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து வெளியேற்றவேண்டும் என்றோ அர்த்தமல்ல. அப்படிச் செய்பவர்கள் இரண்டு டொமினியன்களுக்கும் தீமையே செய்கின்றனர். அவர்களை இரண்டு டொமினியன்களின் எதிரிகளாகவே பாவிக்கவேண்டும். முஸ்லிம்கள் தங்கள் தவறை உணர்ந்துவிட்டனர். எனவே திரும்பி வருகின்றனர். இதற்குப் பிறகும் சர்க்காருக்கு யார் மீதாவது சந்தேகமிருந்தால் விசாரணைசெய்து துரோகம் செய்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் அவர்களை தண்டிக்கலாம்.

சென்ற வாரத் தொடர்ச்சி

# பாகிஸ்தான் டைரி

**லாஹூரில்** நடந்த அட்டகாசங்களைக் கேளுங்கள். அப்பப்பா! சொல்லுவதற்கே மனம் கூசுகின்றதே! நினைத்தாலே மயிர்க் கூச்சல் எடுக்கின்றதே!

அக்டோபர் மாதம் 10-ந்தேதி கராச்சியைவிட்டு லாஹூருக்குப் புறப்பட்டோம். எல்லா ரயில்வேக்களின் சிப்பந்திகளும், தபால் தந்தி இலாகா சிப்பந்திகளும் சேர்ந்த ஸ்பெஷல் ரயில் கராச்சியைவிட்டு புறப்பட்டது. வண்டி கராச்சியைவிட்டு சுமார் 100 மைல் சென்றிருக்கும். இஞ்சினிலிருக்கும் நெருப்பு தள்ளுபவனிடம் (Fire Man) குடாகு (A Kind of Tobacco) தீர்ந்து விட்டது என்று ஓர் நடுக்காட்டில் வண்டியை நிறுத்திவிட்டு கார்டு (Guard) இடம் ஓடி வந்து அந்த புகையிலையை வாங்கிக் கொண்டு சென்ருன்.

இது இங்கு கூறுவதன் நோக்கம் என்னவென்ருல் பாகிஸ்தானில் N. W. R. (Nalayakh, Wahiyath Railway)யின் நிர்வாகம் நடப்பதைக் காட்டுவதற்காகத்தான். சுதந்திரம் அடைந்த நாடு மக்களின் அநுகூலத்தை அனுசரித்தே நிர்வகிக்கப் படவேண்டும் என்று சில நண்பர்கள் நினைக்கலாம். ஆனல் நான் சொல்லுகின்றேன். இவ்விதமான நிர்வாகம், ஓர் அரசாங்கம் நல்லவிதமாக நடப்பதின் அறிகுறியா அல்லது சீரழிவதின் அறிகுறியா என்று? என் அருமை முஸ்லிம் சகோதரா! கோபம் கொள்ளாதே! அமைதியுடன் இவைகளை சிந்தித்துப் பார்.

அடுத்த நாள் வண்டி ஓர் சிறிய ஸ்டேஷனை அடைந்தது. அப்பொழுது நேரம் சுமார் பகல் 1 மணி இருக்கும். தாகமோ சொல்ல முடியாது. ஸ்டேஷனிலோ தண்ணீர் குழாய் கிடையாது. அச்சமயத்தில் அந்த கிராமவாசிகள் கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு விற்பனைக்கு வந்தனர். ஓர் சொம்பு தண்ணீர் ஓர் அணு. சரி அதையாவது வாங்கலாமென்ருல் முஸ்லிம் அல்லாதவர்களுக்குக் கொடுக்க முடியாதென்ற தடை. ஆதலால் தொப்பியும் தாடியும் வைத்த முஸல்மான்களுக்கு மாத்திரம் ஓர் சொம்பு தண்ணீர் ஓர் அணுவென்று விற்றனர். ஆனல் என்னைப்போல் கிராப் வைத்து மீசையையும் தாடியையும் மொட்டையடித்த முஸ்லிம்களின் கதி அதோகதிதான். அதுவும் ஓர் அணுவுக்கு ஓர் சொம்புத் தண்ணீருக்கு மேல் கிடையாது.

பாகிஸ்தான் ஓர் இஸ்லாமிய நாடு என்று பிதற்றுகிருயே தோழா! சிறிது யூகித்துப் பார். இஸ்லாம் இதுதான கற்பிக்கின்றது. விரோதியாய் இருந்தபோதிலும் முழங்கால் தண்ணீரில் நின்று கொண்டு அவன் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டால் கொடுக்கும்படியல்லவா குர்ஆன் சொல்லுகின்றது. ஆனல் இன்று பாகிஸ்தானில் அன்று நடந்த கர்பலாவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருக்கின்றதே, வீண் ஜம்பத்திற்கு வெளியில் மாத்திரம் இஸ்லாமிய நாடு என்று சொல்லிக் கொண்டு உள்ளுக்கு மோசமாக நடந்துகொள்ளுகின்ருயே தோழா! இவைகளெல்லாம் உன் ஊழல்களல்லவா?

அடுத்த நாள் மாலை 3 மணிக்கு நம் வண்டி வால்டன் காம்ப் (Walton Camp) என்னும் ஸ்டேஷனை அடைந்தது. அங்கு கண்டதென்ன? ஓர் பெரிய குழி தோண்டி அதில் முஸ்லிம்களின் பிரேதங்களை ஒன்றுக்கு மேல் ஒன்ருக தூக்கி எறிகின்றனர். அந்த பிரேதங்களின் மேல் ஓர் ஒழுங்கான காபன் (Coffin) கிடையாது. அந்த பிரேதங்களைக் குளிப்பாட்டினர்களோ இல்லையோ அதுவும் தெரியவில்லை.

இச்செய்திகளை முன்பு யுத்தகளத்தில் நடப்பதாகக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனல் அன்று நம் கண்களாலேயே புண்ணிய பாகிஸ்தானில் கண்டு கொண்டோம். இஸ்லாமிய நாடு என்று சொல்லுகிருயே தோழா, காபன் இல்லாமல் அடக்கம் செய்கின்ருயே. அதுவும் ஒரு பள்ளத்தில் பல பிரேதங்களாக!

முஸ்லிம் பிரேதங்களுக்கு காபன் சப்ளை செய்ய பாகிஸ்தான் அரசாங்கத்தால் முடியவில்லை என்ருல் அதுவும்ஓர் முஸ்லிம் அரசாங்கமா? உலகிலுள்ள மற்ற மேன்மையான அரசாங்கங்களுக்கு பங்கம் விளைவிக்கத் தோன்றிய அரசாங்கமா, பாகிஸ்தான் அரசாங்கம் !!

என் மேல் கோபங் கொள்ளாதே என் அருமை தோழா! நான் உள்ளதை உன்னிடம் கூறுகின்றேன்.

நம்பினால் நம்பு இல்லாவிட்டால் நேரில் சென்று பார்த்துவிட்டு வா. இங்கு உட்கார்ந்து கொண்டு என்னையும், என்னைப்போன்ற மற்றும் போய்விட்டு வந்த தோழர்களையும் பார்த்து கேலி செய்யாதே. நீ வீணாகப் பாகிஸ்தான் வேண்டுமென்று சப்தம் போட்டாய். ஆனால் சப்தம் போட்டதல்லாமல் நாம் பாகிஸ்தானில் சேவை செய்ய விரும்பி அங்கு சென்றோம். ஆனால் ஏமாற்றத்துடன் திரும்பினோம். திரும்பி வந்ததற்குக் காரணங்கள் இருக்கின்றன தோழா. உயிருக்குப் பயந்தல்ல. மானத்திற்கு பயந்து வந்தோம் அது பின்னால் போகப்போக அறிந்து கொள்வாய் அப்பனே.

1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 13-ந்தேதி மாலை 3 மணிக்கு லாஹூர் அடைந்தோம். ஸ்டேஷனை விட்டு மாலை 6 மணிக்கு அங்கு அருகிலிருந்த ஓர் காம்ப் (Camp) -க்கு சென்றோம். இரவு முழுவதும் அங்கேயே தங்கினோம். அடுத்த நாள் காலை 10 மணிக்கு வேலைக்கு ரிபோர்ட் செய்யச் சென்றால் ஓர் (Prescribed Form) குறிப்பிட்ட பாரத்தில் எழுதிக் கொடுக்கச் சொன்னான். நாமும் அவ்வாறே எழுதிக் கொடுத்தோம். அடுத்த நாள் வரச் சொன்னான். அடுத்த நாள் சென்றோம். வேலையில் நம்மை வைத்துக் கொள்வதாகக் காணோம். இவ்வாறு பல நாட்கள் சென்றன. கடைசியில் அப்போது பாகிஸ்தானின் பிரதம மந்திரி லாஹூரில் இருந்தார். அவரைக் காண நம்மில் 10 பேர் சென்றோம். 'நாம் நம் குறைகளையும் எடுத்துச் சொன்னோம். நம் குறைகளாவன:— "வேலையை ரிபோர்ட் செய்ததும் வேலையில் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் ஏற்பட்ட கஷ்டமென்னவென்றால் பிரயாண அலவன்ஸ் (T. A)-க்கு எழுத முடியவில்லை. நம்மில் அநேகர் கொண்டுவந்த சிறு தொகை செலவழிந்து விட்டது. பட்டினியால் வாடி வதங்க நேரிட்டது இத்தனைக்கும் நம் கையில் டிரான்ஸ்பர் ஆர்டர்ஸ் (Transfer Orders) வைத்திருந்தோம். இரண்டாவதாக இருக்க இட வசதி இல்லை. காலமோ! பனிக் காலம். பனி என்றால் நம் நாட்டில் பெய்யும் மழையைப் போன்றது. ஆதலால் நாம் வீடுகளோ அல்லது சிறு அறைகளோ கேட்டால் யாரும் கொடுப்பாரில்லை. மூன்றாவதாக வேலையில் எடுத்துக் கொண்ட பல பேர்களின் சம்பளம் குறைக்கப் பட்டது. 'Transfer Order' லேயே சம்பளம் எழுதப்பட்டிருந்தும் சம்பளம் குறைக்கக் காரணம் கேட்டால் "இது பாகிஸ்தான். பாகிஸ்தானில் அப்படித்தான் கொடுக்க முடியும்" என்றனர் அந்த பாகிஸ்தானிலுள்ள ஆபீஸர்கள். "நாம் இங்குக் கஷ்டப்பட வந்தோமா, பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடு என்றீர்கள். அதற்காக நாம் 8 வருஷ காலமாக பாடு பட்டோம். கடைசியில் அடைந்தோம். அடைந்த பிறகு சேவை செய்ய வந்தால் சம்பளக் குறைவு ஏற்படுகின்றதே என்றோம். அதற்கு அந்த ஆபீஸர்கள் "உங்களை யார் கூப்பிட்டனர் பாகிஸ்தான் என்றால் பாகிஸ்தானில் வாழும் 5½ கோடி முஸ்லிம்களுக்கு மாத்திரம் சுதந்திரமே ஒழிய இந்திய டொமினியனிலிருந்து வரும் மைனாரிட்டி முஸ்லிம்களுக்கு கிடையாது" என்று பஹிரங்கமாக கூறுகின்றனர்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த லியாகத் அலிகான் "நான் என்ன செய்ய வேண்டும். எல்லா அதிகாரங்களும் அந்தந்த டிபார்ட்மெண்டுகளின் அதிகாரிகளிடம் ஒப்படைத்தாய் விட்டது. ஆதலால் நீங்கள் அவர்கள் கூறுவதுபோல்தான் நடந்தாக வேண்டும்" என்றார்.

தோழர்களே! இது ஓர் பிரதம மந்திரி சொல்லக் கூடிய வார்த்தைகளா என்றுதான் கேட்கின்றேன். அவர் நம்மைப்போல் கஷ்டங்கள் அனுபவித்திருந்தாலல்லவா அவருக்குத் தெரியும் அந்தக் கஷ்டம். அவர் ஹாய் என்று ஓர் பெரிய பங்களாவில் தங்கியிருக்கிறார். வெளியில் சப்ராஸிகள், (Interview) பார்க்க அனுமதி கேட்டால் நாளைக்கு வா என்பது. அடுத்த நாள் சென்றால் அதற்கு அடுத்த நாள் வரச் சொல்வது. கடைசியில் நான்காவது அல்லது ஐந்தாவது நாள் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் காக்க வைத்து பார்க்க அவகாசம் (Interview) கொடுப்பது. அப்போது பேசினால் இப்பொழுது நேரமில்லை. வந்த காரியத்தை சீக்கிரம் சொல்லு என்பதும், சொல்லும்போதே நேரமாகி விட்டது, இப்பொழுது போய்விட்டு நாளை வாருங்கள் என்றும் கூறினால் ஓர் டொமினியன் பிரதம மந்திரி ஸ்தானத்திற்கு லாயக்குள்ளவரா என்று கேட்கின்றேன். நம் லீக் தலைவர்களெல்லாம் பதவிப் பித்து பிடித்தவர் என்று கூறினால் உங்களுக்கு கோபம் வராமல் இருக்காது. ஆனால் நாம் கண்ணால் பார்த்து அவர்கள் பேசியதை காதால் கேட்டதிலிருந்து நன்றாக யூகித்தால் பதவிப் பித்தர்கள் என்று கூறுவதில் குற்றமில்லை.

நம்மில் அநேகர் ஷிப்ட் (Shift) டியூடி செய்பவர்களுமிருந்தனர். அவர்களுக்கு வாராவாரம் வேலை நேரம் மாற்றப்படும். அம்மாதிரி மாற்றுவதில் 11 விதங்கள் உண்டு. (அதாவது 6 to 14, 7 to 15, 8 to 16, 9 to 17, 10 to 18, 12 to 20, 14 to 21, 15 to 22, 18 to 0, 20 to 2 and 2 to 8) இதில் வாராவாரம் ஒவ்வொரு நேரமாகத்தான் வரும்.

ஆனால் பாகிஸ்தானில் இங்கிருந்து சென்ற முஸ்லிம்களுக்குக் கொடுத்த வேலை நேரம்என்ன தெரியுமா, தோழா? (6 to 14, 15 to 22, 20 to 2 and 2 to 8) இவைகளே. இந்த நேரங்களைத் தவிர மற்ற நேரங்கள் 4 மாத காலத்தில் கொடுக்கப்படவேயில்லை நாம், வேலை நேரம் போடும் குமாஸ்தாவிடம் சென்று கேட்டால் அவர் அதற்கு ' இது பாகிஸ்தான். பாகிஸ்தானில் பஞ்சாபிகளுக்கே முதல் சலுகை கொடுக்கப்படும். உங்களை இங்கு யார் கூப்பிட்டனர்" என்கின்றார். தோழா காலை 6 மணிக்கு வேலைக்குப்போக வேண்டுமென்றால் 2 மைல் நடந்து செல்ல குறைந்தது 4 மணிக்கு படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். பிறகு 5 மணிக்கு புறப்பட்டால்தான் 6 மணிக்கு ஆபீஸுக்குசரியாகப் போய் சேரலாம். தோழா நீ என்னுடைய ஸ்தானத்தில் இருப்பதாக நினைத்துப்பார். பனியோ, மழையைப் போல் கொட்டுகின்றது. வேலையில் போய் உட்கார்ந்தால் விரல்களெல்லாம் விறைத்துப்போய் நிற்கின்றன. அந் நிலையில் நீ என்ன செய்வாய்? உன் பெரிய ஆபீஸுக்கு மனுப்போடுவாய் அல்லவா? நாமும் அதேதான் செய்தோம். ஆனால் அது பெரிய ஆபீஸரிடம் சேரமாட்டேன் என்கின்றது. ஏன்? தலைமை குமாஸ்தா அதைப் படித்துப் பார்த்துவிட்டு மேலே அனுப்பாமல் கிழித்து விடுகின்றார்போலும். நேராகப் போய் பெரிய ஆபீஸரிடம் கேட்டால் உன் மனு இங்கே வரவேயில்லை என்று சொல்லி விடுகின்றார். இதுதான் ஓர் அரசாங்கம். அதுவும் அரசாங்க ஆபீஸில் நடக்கும் அட்டூழியம்.

இப்பொழுது வீடுகள் கிடைக்கும் விபரங்களைக் கேள் தோழா. முதலில் நாம் டிபார்ட்மெண்ட் மூலமாக மனுப்போட வேண்டும். பிறகு அந்த மனு மாஜிஸ்டிரேட்டுக்கு டிபார்ட் மெண்டாலேயே அனுப்பப்படும் மாஜிஸ்டிரேட் ஏதாவது ஓர் சீக்கியருடைய வீட்டை நமக்குச் கொடுப்பார். கொடுக்கும் போது அவருடைய சப்ராஸி (கியா பாய் சாஹிப்குச் தபி) ஏதாவது சர் திங் என்று கை நீட்டுவான் அப்போது நாம் 10 அல்லது 15 ரூபாய் லஞ்சம் கொடுக்கவேண்டும். இதைத் தவிர மாஜிஸ்டிரேட்டுடன் வரும் போலீஸ்காரர்களுக்குக் கூட ஸம்திங் கொடுக்க வேண்டும். சரி இப்போது வீடு கிடைத்து விட்டதே என்று சந்தோஷமடைய முடியாது. ஏனெனில் பக்கத்திலிருக்கும் பஞ்சாபிகள் சும்மா இருக்க மாட்டார்கள். லூட் செய்ய சமயம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வீட்டிலிருக்கும் ஆண்கள் வெளியே சென்றுவிட்டால் பெண்களை கற்பழிக்கவும் முற்படுவர். இவ்வாறு லாஹூரில் நடந்த அட்டூழியங்கள் பல. இது மாத்திரமா!

(தொடரும்)

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

கருமேகங்கள் சூழலாம். அதனால் உண்மை முஸ்லிமுடைய உள்ளம் உடைய முடியாது. அவனுடைய நிதானம் தவறமுடியாது. அவனுடைய உறுதி தளர்ச்சி அடையாது.

ஆயினும் இன்று முஸ்லிம்கள் தாங்களே தயாரித்த பாடையில் தாங்களாகவே படுத்துக்கொண்டு உலகத்தோரை வந்து கூடி பிரலாபிக்கும்படி ஏன் அழைக்கின்றனர்? மற்றவர்கள் இரக்கப்படக்கூடிய நிலைமையில் அநாதைகளாக நிற்பதன் அவசியமென்ன? இந்த நிலைமை சமூகத்தின் மரணமாகும். மனிதன் பட்டினி கிடக்கின்றான். அதற்காக ஒழுக்கம் இழந்துவிடுவதில்லை, அமைதி குலைவதை அனுமதிப்பதில்லை மனிதன் எல்லாவற்றையும் இழக்கின்றான். கௌரவத்தை விட்டுக்கொடுப்பதில்லை

இஸ்லாம் நிதானத்தையும் சகிப்புத்தன்மையையும் போதிக்கின்றது உயிரை அர்ப்பணித்தாகிலும் மானிட கௌரவத்தையும் மேம்பாட்டையும் நிலைநிறுத்தவேண்டியது முஸ்லிம்களின் கடமை. முஸ்லிம்களின் இன்றைய நிலைமைக்குக் காரணமென்ன? அதற்குப் பரிகாரமென்ன? என்பதில் உடனடியாக முஸ்லிம்கள் கவனம் செலுத்தவேண்டும். முஸ்லிம்களின் அன்றைய ஆர்வமும் ஆவேசமும் தவறானவை. அதைப்போலவே இன்றைய பீதியும் அவநம்பிக்கையும் அர்த்தமற்றவை என்பதை முஸ்லிம்கள் உணர்ந்து விட்டால் அதுவே சிறந்த பரிகாரமாகும்.

## ராமனாதபுரம் ஜில்லாவாசிகளுக்கு அறிவிப்பு.

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தலைமையில் லக்னோவில் செய்யப்பட்ட முடிவை அனுசரித்து மார்ச் 8-ந்தேதி சென்னையில் நடந்த மகாநாட்டில் சென்னை மாகாணத்தில் ஐக்கிய முன்னேற்ற ஜில்லா கமிட்டிகள் அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. ராமனாதபுரம் ஜில்லாவுக்காக என்னை நியமித்து கமிட்டி அங்கத்தினர்களாக சேர்க்கப்பட நான்கு ஹிந்து முஸ்லிம் சகோதரர்களின் பெயர்களை சிபார்சு செய்யும்படி எனக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது. எனவே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, தேச முன்னேற்றம், காந்தீயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் மேற்படி லட்சியங்களுக்காக பாடுபட கமிட்டியின் அங்கத்தினர்களாக இருக்க விரும்புகின்றவர்கள் தயவு செய்து அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

க. அ. மு. ஷவுகத் அலீ.
கீழக்கரை.

# இந்திய டொமினியன் முஸ்லிம்கள்.

இந்தியாவில் ஆகஸ்ட் 15-க்கு முன்னாலிருந்த முஸ்லிம்கள் வேறு. அதற்குப் பிறகுள்ள முஸ்லிம்களே வேறு. ஜுலை முஸ்லிம்களுக்கும், செப்டம்பர் முஸ்லிம்களுக்குமிடையே ஆகாயத்துக்கும் பூமிக்குமிடையே உள்ள வித்தியாசங்கள் ஏற்பட்டுவிட்டன ஜுலை மாதம், தவறான வழியில், அலட்சியமாய் போய்க்கொண்டிருந்தான் முஸ்லிம். இருப்பினும், அவனிடம் உறுதி, துணிச்சல், நம்பிக்கை இருந்தன. எல்லையை எட்டிப்பிடிக்க மின்னல் வேகத்தில், மூர்த்தண்யமாய் ஓடிக்கொண்டிருந்தான். தயக்கம், தளர்ச்சி என்னவென்று அவனுக்குத் தெரியாமல் இருந்தது

ஆகஸ்ட் 15 காலை அவனுடைய நாடிகள் தளர்ந்தன. செப்டம்பரில் நிதானமிழந்தான். அடுத்த சில மாதங்களில் ஹிருதயத் துடிப்பு மந்தமடைந்து ரத்த உஷ்ணம் தணிய ஆரம்பித்துவிட்டது.

ஆனால், இன்று! இந்தியாவில் நாலரைக்கோடி நடைப்பிணங்கள் காணப்படுகின்றன அவர்கள் நடமாடுகின்றனர். தாங்கள் போகும் திக்குதிசை அவர்களுக்கே தெரியாது. மாலைவரை இருப்பார்களா, இறப்பார்களா என்று சொல்லமுடியாது.

சுவாசம் ஓடிக்கொண்டுதானிருக்கின்றது. ஆயினும் அவநம்பிக்கை படுபாதாளத்திலிருந்து அவனால் வெளியேற முடியவில்லை

கவிழ்ந்த தலை. ஒடுங்கிய உள்ளம், கலங்கிய சித்தம், கவலை தோய்ந்த முகம், தடுமாறும் நடையுடன் எதிர்கால பயங்கரத்தைக் கண்டு நாளை என்ன? நாளை மறு நாள் என்ன? சம்பவிக்குமோ என்று ஏங்கி நிற்கின்றான் முஸ்லிம்.

முஸ்லிம்களின் பரிதபிக்கத்தக்க இந்த நிலைமை சமூகத்துக்கு மட்டுமின்றி சர்க்காருக்கும் அபாயகரமானது. வாழ்க்கையில் அவநம்பிக்கை, தளர்ச்சி, பீதி, பயம், தோல்வி மனப்பான்மை கொண்டிருக்கும் காலரை கோடி மக்கள் சர்க்காருக்கு பெரும் சுமையாகவே இருந்துவருவர்.

தன்னம்பிக்கையுடன் நாட்டை எதிர்நோக்கும் பிரச்னைகளை சமாளித்து முன்னேறிச் செல்ல, தியாகம் செய்து கௌரவத்தின் உன்னத சிகரத்தை அடைய, முயற்சிப்பவர்கள் சமூகத்துக்கு மட்டுமின்றி ஜனநாயகத்திற்கும், சமுதாய வாழ்க்கைக்கும் சேவை செய்ய முடியும். ஜனநாயகம் வெற்றியடைந்து தேசம் முன்னேற்றமடைய முற்போக்கு நோக்கமுள்ள சிறந்த பிரஜைகள் தேவை.

முஸ்லிம்களின் தளர்ச்சி இதர சமூகங்களை பாதிக்காமல் இருக்கமுடியாது. ஒடுக்கப்பட்டிருந்த தீண்டப்படாத மக்களால் ஹிந்து சமூகம் பாதிக்கப்படாமல் இருக்கவில்லை. எனவே ஒடுக்கப்பட்ட மக்களால் தேசம் பாதிக்கப்படாமல் இருக்க இன்று முஸ்லிம்களின் பிற்போக்கான நிலைமைக்கு உடனடியாக பரிகாரம் செய்யப்படவேண்டும். இல்லையேல் நம்முடைய கூட்டு அரசியல் வாழ்க்கை புத்துயிர் பெற முடியாமல் போவதுடன் இந்தியர்களின் கூட்டு கலாசாரத்திற்கே கரையான் அரிக்க ஆரம்பித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

வகுப்புவாத பிற்போக்காளர்களாய் முஸ்லிம்கள் இருந்தார்கள் என்பது வாஸ்தவமே. ஆனால் வகுப்புவாத பிற்போக்கு சக்திகள் தலைவிரித்தாடுவதைக் கண்டு அவனே நடுங்குகிறான். மனதில் உள்ளதை அப்படியே வெளியிட அவனுக்கு தைரியமில்லை. ஆகையால் தான் பேசுவதைக்கொண்டு தன்னுடைய மனதை திருப்தி செய்ய அவனால் முடியவில்லை. இந்தியாவில் இருக்கின்றான், ஆனால் உள்ளம் உடைந்து வீடுகளில் வசிக்கின்றான், மனம் நொந்து. தூங்குகிறான், விழிக்கிறான், சாப்பிடுகிறான், ஆனால் ரயில்வே பிளாட்பாரத்தில் இருப்பதைப் போல். இவ்வித இரண்டும் கெட்ட நிலைமையில் இருக்கும் மக்கள் யாராக இருப்பினும் அவர்கள்மீது இரக்கப்படாமல் இருக்கமுடியாது.

இந்த நிலைமை முஸ்லிம்களுக்கு பொருந்துமா? நம்பிக்கை இழப்பது முஸ்லிம்களுக்கு அழகா? இந்த நிலைமையிலிருக்கும் முஸ்லிம்களை முஸ்லிம்கள் என்று சொல்லக்கூடுமா? நித்தியக் கடவுள், நித்திய குர்ஆன், நித்திய இஸ்லாமுடன் அவர்களுக்கு சம்மந்தம் உண்டென்று சொல்லமுடியுமா?

முஸ்லிம் எதுவானாலும் ஆகலாம். நம்பிக்கை இழந்தவன் ஆகமுடியாது. முஸ்லிம் அழிபலாம். தன்னுடைய கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுவதை அனுமதிக்கமுடியாது முஸ்லிம் உயிரைப் பணயம் வைக்கலாம். தன்னுடைய பலஹீனத்தைப் பார்த்து சிரிக்கும்படியான சந்தர்ப்பம் உலகுக்கு அளிக்கமுடியாது அழிவுச் சண்டமாருதங்கள் அடிக்கலாம். பொசுக்கும் இடிகள் இடிக்கலாம் அவநம்பிக்கை

(8-ம் பக்கம் பார்க்க)

# அன்பர் கடிதம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு நன்றி. இந்த வாரம் தங்கள் திங்கள் ஆஸாத் பார்த்ததும் மகிழ்ச்சி மலிந்த சிந்தனையிலாழ்ந்தேன். ஆஸாத் (சுதந்திரம்) என்று ஸ்மரித்த மாத்திரத்திலேயே வாய்பூட்டு சட்டமும், தடியடிப் பிரயோகமும், சிறைக்கூடமும், சித்ர வதையும் செய்துவந்த அக்காலையில், நமது நாட்டின் மேதை மௌலானா அபுல் கலாம் அவர்கள் அல் ஹிலால் (இளம்பிறை) என்னும் பத்திரிகையை ஆரம்பித்து 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' - ஏன்! 'ஒவ்வொரு இந்தியனின் பிறப்புரிமையும் உயிரும் அதுவே, அதைத் தடுக்க உலகில் எந்த சக்திக்கும் உரிமை கிடையாது.' என்று ஓயாது வீரமுரசறைந்து ஒவ்வொரு இந்தியனுக்குள்ளும் சுதந்திர தாகக் கனலைக் கிளப்பி பெருத்த கிளர்ச்சி உண்டாக்கினர். ஆஸாத் என்ற ஆசிரியர் அத்துணை மதிப்புக்கும் மகத்துவத்திற்கும் உரிய பெயரில் ஆஸாதில் (சுதந்திரத்தில்) நான் கொண்ட அளவற்ற பிரேமையின் காரணமாக என் இளைய குமாரனுக்கு 'இஸ்மாயில் ஆஸாத்' என்ற நாமமிட்டிருக்கிறேன். பால்யன் முதல் பாட்டி வரை அந்நாமத்தைச் சொல்லி குழந்தையை அழைக்கும் ஒவ்வொரு கணமும் சந்தோஷித்துக்கொண்டிருக்கும் என் உள்ள உணர்ச்சிப் பெருக்கிற்கு தங்கள் ஆஸாத் ஒரு தனி ஜீவ உத்வேகத்தை உண்டாக்கியிருக்கிறது. மேலும் ஆஸாதில் தொடர்ந்து இடம்பெறும் 'புனர்வாழ்க்கை' என்ற கட்டுரையை சமநிலை உள்ளத்தோடு படித்துவந்தால் வகுப்பு வாதக் குட்டையில் மூழ்கித்தவிக்கும் எந்த வகுப்புவாதியும் உடனடியாக ஐக்கிய தேசிய சமுதாயமெனும் கரைசேர்ந்து தன் வாழ்க்கையை புனருத்தாரணம் செய்வதுடன் பிறரையும் திருத்தும் ஆற்றல் பெற்று ஒரு ஜனநாயக ஸோஷலிஸ புது சமுதாயத்தை சிருஷ்டிக்கும் வேலையிலீடுபட்டு ஒரு மகத்தான வெற்றியைக் காண்பான் என்பது திண்ணம். அத்துடன் தங்கள் ஆஸாதில் உர்து, அரபி, பாரசீகம் முதலிய மொழிகளிலுள்ள கற்பனை திறன்களையும் கண்டுகளித்தின்புற ஹேதுவாயிருக்கின்றது. குறிப்பாக "ஆஸாத்", முஸ்லிம் லீகால் ஏற்பட்ட முஸ்லிம்களின் பெருத்த அழிவை, பாமர முஸ்லிம்கள் தெரிந்துகொண்டால் மீண்டும் முஸ்லிம் லீக் உருவாக வேண்டும் என்ற வஞ்சக எண்ணம் நிறைவேறாமற்போகும் என்ற உண்மைக்கு விரோதமாகப் பொய்ப்பிரசாரம் செய்து ஏமாற்றி வரும் லீக் லீடர்களின் முட்டாள்தனமான, நாசகரமான, வேலையை பாமர முஸ்லிம்களுக்கு புரியும் முறையில் எடுத்துச் சொல்வதுடன், நம் பிதா மகாத்மா காந்தியடிகள் அடிக்கடி சொல்லிவந்த "ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையாகிய" பொன்மொழிகளுக்கு பங்கம் விளைவிக்கும் எவனும் துரோகி, தூக்கிலிடப்படவேண்டியவன் என்று துணிவுடன் பட்டவர்த்தனமாகப் பறை சாற்றியும்வரும் தங்கள் பத்திரிகாதர்மத்தையும், திட உறுதியையும் தீவிரப் புரட்சிப் போக்கையும் கண்ட நியாய உள்ளம் படைத்த எவரும் போற்றி ஆதரிக்காமலிரார்.

வாழ்க இந்தியா! வாழ்க மகாத்மா நாமம்!!

வாழ்க ஆஸாத்!!!

ஆஸாத் பிரியன்,
K. M. முகைதீன் பிச்சை,
கல்லிடைக்குறிச்சி.

---

## பாபூஜி இளைஞர் சங்கம், காரைக்குடி.

அன்புள்ள ஐயா!

எங்கள் சங்கத்தின் திறப்புவிழா 21—3—48 ஞாயிறன்று செல்லகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. எங்கள் சங்கத்தில் முஸ்லிம்களும் மெம்பராக சேர்ந்துகொள்ளலாம்.

தங்கள் அன்புள்ள சிறுவன்,
N இராமலிங்கம், காரியதரிசி.

---

# சத்தியமூர்த்தி நினைவுநாள்.

## காரைக்குடி.

28—3—48 மாலை ஆ. ரு. சொக்கலிங்கம் செட்டியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. திரு. பொன்னையா, கண்ணப் செட்டியார், ஸ்ரீனிவாஸன், சுலைமான், இஸ்மாயில், டாக்டர் V. S. S. மணி முதலியோர் சத்தியமூர்த்தியின் சேவையைப் பாராட்டிப் பேசினர்கள். சத்தியமூர்த்தி, மகாத்மாஜியின் ஆத்ம சாந்திக்காக மௌனப் பிரார்த்தனைக்குப் பிறகு கூட்டம் இனிது முடிவடைந்தது.

## பன்ருட்டி

ரயிலடியிலிருந்து தலைவர்கள் ஊர்வலம் புறப்பட்டு நூர் முகம்மதுஷா அவுலியா தர்காவை அடைந்து M. வேணுசாமி ராஜா தலைமையில் கூட்டம் நடந்தது. நயினம் பிள்ளை, P. M. ஆதிகேசவலு, R. பலராமன், பா. வை. முத்துக்குமாரசாமி முதலியோர் சத்தியமூர்த்தியைக் குறித்து விரிவாகப் பேசினர்கள். வகுப்புவாத சுயநலமின்றி ஒற்றுமையால் தேசத்தை காப்பாற்ற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்கள். வந்தனோபசாரத்திற்குப் பிறகு கூட்டம் இனிது முடிந்தது.

பேம்சந்த்

# யூனியனா, சீக்கியஸ்தானா?

கிழக்கு பாஞ்சால சமஸ்தான பிரச்னை இது வரை தீராமலேயே இருந்தது. சமஸ்தான இலாகா காரியதரிசி மிஸ்டர் மேனன் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்டதிலிருந்து பிரச்னையின் தன்மையே மாறிவிட்டது. பரீத்கோட், நாப், ஜயந்த், கபூர்தலா, கோட்லா சமஸ்தானங்கள் ஒரு யூனியனாக சேர்க்கப்படுமென்றும், பாடியாலா தனித்திருக்கு மென்றும் மிஸ்டர் மேனன் வெளியிட்டார்.

சமஸ்தானங்களை யூனியனாக சேர்த்து சமஸ்தான இலாகா ஏதோ பெரிய காரியத்தை சாதித்துவிட்ட தாக சிலர் புகழுகின்றனர். அதில் புகழுவதற்கு என்ன இருக்கிறதென்பதுதான் புரியவில்லை. சமஸ்தானங்க ளெல்லாம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டால் வாஸ் தவமாகவே புகழத்தான்வேண்டும். தவிர சமஸ்தா னத்துக்கொரு கொள்கையாக பல்வேறு கொள்கைகள் அனுசரிக்கப்படுவது இன்னும் வருந்தத்தக்க விஷய மாகும். அதிலும் சமஸ்தான மக்களை கேட்காமலேயே சமஸ்தானங்களைக் குறித்து முடிவு செய்யப்படுவதை எவ்விதத்திலும் வரவேற்க முடியாது.

இன்று கிழக்குப் பஞ்சாப் சமஸ்தானங்கள் மாகா ணத்துடன் இணைக்கப்படுவதையே விரும்புகின்றனர் அதுதான் தங்களுடைய நலன்களுக்கு உகந்ததென் றும் அவர்கள் நினைப்பது முற்றிலும் நியாயமே ஆயி னும் இன்று நடப்பது அதுவல்ல.

சமஸ்தானங்கள் யூனியன் ஏற்படுத்துவதா அல் லது மாகாணத்துடன் இணைக்கப்படுவதா என்ற விஷயம், சம்மந்தப்பட்ட சமஸ்தானப் பொதுமக்க ளிடையே ஓட்டெடுப்பு நடத்திப்பார்த்தால் அவர்கள் மாகாணத்துடன் இணைக்கப்படுதையே ஆதரிப்பர் என் பது நிச்சயம். ஆனால் பாடியாலா மஹாராஜாவின் இரண்டும் கெட்ட நிலைமை இதற்கு பெரும் முட்டுக் கட்டையாக இருந்துவருகிறது.

சமஸ்தான இலாகா தொண்டையில் பாடியாலா எலும்பு சிக்கிக்கொண்டு விழுங்கவோ துப்பவோ முடி யாமல் தவிப்பதாகத் தெரிகிறது. பாடியாலா சம்மந் தப்பட்டவரை சமஸ்தான இலாகா தணிந்து போவ தால் சமஸ்தானப்பிரச்னையிலேயே சிக்கல் உண்டாக் கப்படுகிறது.

உத்தேச யூனியன் அகாலிகளுக்கு பழம் நழுவி பாலில் விழுந்தமாதிரிதான். அகாலிகளும் பாடியாலா மஹாராஜாவும் பரஸ்பரம் ஒத்துழைக்கின்றனர் இதற் காகவென்று சமஸ்தானத்தில் குடியேற்றப்பட்டுள்ள நாலுலட்சம் அகதிகளை மஹாராஜா ஆயுதமாக உப யோகிக்கிறார், அகதிகளில் பெரும் பான்மையோர் சீக்கியர். பாடியாலாவில் சீக்கிய வகுப்புவாத ஆயுதத் தைக்கண்டு சமஸ்தான இலாகா பின்வாங்குகிறதா என்பது தெரியவில்லை.

பாடியாலாவின் விதண்டாவாதத்தால் போபால், பிகானீர், ஜோத்பூர், உதயபூர், ஜெயப்பூர் சமஸ்தானங் களை இந்திய யூனியனில் சேர்க்கப்படாமல் விட்டுவைக் கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு குறையை மறைக்க பத்து குறைகள் செய்யப்படுகின்றன. இன்று யூனிய னாக சேர்க்கப்படும் சமஸ்தானங்கள் பல இடங்களில் இடை யிடையே பஞ்சாப் மாகாண பிரதேசங்களால் பிரிக்கப்படுகின்றன.

கிழக்கு பஞ்சாப் மிகச் சிறிய மாகாணம் சமஸ் தானங்களை அதனுடன் இணைப்பதால் ராணுவ,பொரு ளாதாரத் துறைகளில் நல்ல பலன் ஏற்படமுடியும். பாகிஸ்தானை ஒட்டியிருக்கும் அங்கு அடிக்கடி தகராறு கள் தோன்றலாம். எல்லை பாதுகாப்பை பலப்படுத்த சமஸ்தானங்கள் மாகாணத்துடன் இணைக்கப்படுவது தான் சிறந்த வழி அதனால் பொருளாதார அபி விருத்தி ஏற்படுவதுடன் சீக்கிய வகுப்புவாத கோஷங்களுக்கும் சாவுமணி அடிக்க முடியும், இல்லை யேல் பிற்காலத்தில் விபரீதங்கள் விளைய இடமிருக் கிறது.

வெள்ளையர்கள் பாகிஸ்தான் ஏற்படுத்தினார்கள் நாம் சீக்கியஸ்தான் ஏற்பட இடமளிக்காமல் ஜாக் கிரதையுடன் இருக்கவேண்டும். வெள்ளையர்களால் பலமடைந்த முஸ்லிம்லீக் கோரிக்கைக்கு காங்கிரஸ் பணிந்து பாகிஸ்தானுக்கு இடமளித்து விட்டது. இன்று பாடியாலா மஹாராஜா ஆதரிக்கும் அகாலி கட்சிக்கு இந்தியர்கள் இணங்கி சீக்கியஸ்தானுக்கு இடமளிக்காமல் இருக்கவேண்டும்

பாகிஸ்தானால் அடைந்த துன்பங்களுக்குப் பிறகு சீக்கியஸ்தான் தொல்லைகள் சகிக்க மக்கள் தயாராக இல்லை. எனவே சமஸ்தான இலாகா கண் டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.

பஞ்சாபி பாஷை பேசப்படும் பிரதேசங்களைக் கொண்ட பாஷாவாரி மாகாணக் கோரிக்கை ஒன்றும் இருந்துவருகிறது. அங்கிலேயில் அம்பாலா, கர்னால், பானிபட், ரோஹ்தக், குர்க்கான் ஜில்லாக்களை பிரிக்க வேண்டியிருக்கும். அதற்குப்பிறகு சீக்கியஸ்தான தானாகவே உருவாகிவிடும். பஞ்சாப் விஷயத்தில் இந்திய சர்க்கார் வெகு ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# —: புனர் வாழ்க்கை. :—

(o)

## விடுதலையும், பிரிவினையும்

தாய்நாடு விடுதலை அடைந்தது. அடிமைத் தளைகள் தகர்ந்தன. இந்தியர்கள் அளவற்ற சந்தோஷத்தால் ஆனந்தக் கூத்தாடியிருக்க வேண்டும். ஆனால் சரித்திர பூர்வமான அந்த தினத்தில் இயற்கையாக இருக்க வேண்டிய அளவு உத்ஸாகம் நமக்கு இருக்கவில்லை.

சுதந்திரத்துடன் கூடவே வந்த பிரிவினை நம் சந்தோஷத்தை பாதி அளவிற்கு குறைத்துவிட்டது. உண்மையாகக் கூறுமிடத்து நமக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை விட மனக் கஷ்டத்தின் அளவே அதிகம். நாலாயிரம் வருஷங்களாக நாம் கண்ட இந்தியா துண்டாடப் பட்டு விட்டது ஆயிரம் வருஷங்களுக்கு மேல் சகோதரர்களாக வாழ்ந்த ஹிந்து முஸ்லிம்கள் பிரிந்து கிடக்கின்றனர். இதைக் குறித்து சந்தோஷப்பட்டவர்கள் யாராவது இருக்கலாம். ஆனல் தேசியப்பற்றுள்ள இந்தியர்கள் ரத்தக் கண்ணீர் வடிக்கத்தான் செய்தார்கள்.

அதுமட்டுமல்ல தேச பக்தர்களிடையே ஒருவித தோல்வி மனப்பான்மையின் அறிகுறிகள் தென்படுகின்றன. பிரிட்டிஷ் ராஜதந்திரிகளால் தோற்கடிக்கப்பட்டோம் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தை உறுத்திக் கொண்டேயிருக்கின்றது.

### பிரிட்டிஷ் சூழ்ச்சியின் வெற்றி

இந்தியப் பிரிவினை பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் மஹத்தான வெற்றி அதைக் குறித்து அவர்கள் பெருமை அடைந்தால் அது முற்றிலும் நியாயமே. பலஹீனமானதொரு மத்திய சர்க்காரே ஆனலும் சரி அதன் கீழ் இந்தியா ஐக்கியமாக இருக்கவேண்டுமென்பது காங்கிரஸின் ஆசை. அதற்காக அது எவ்வளவோ விட்டும் கொடுத்தது. அந்த ஆசையையும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்கார் தவிடு பொடியாக்கிவிட்டனர். தங்களுடைய நீண்ட நாட்களின் திட்டப்படி நாட்டை துண்டாடியே விட்டார்கள். அதையும் ஏற்றோம். எதற்காக? நாட்டின் குழப்பமான நிலைமையில் அதை தவிர்க்க முடியவில்லை என்பதற்காக.

குழப்பங்களையும் கலகங்களையும் தேசத்தில் தூண்டிவிட்டவர்கள் யார்? ஒன்றை செய்வதற்கு முன் அதற்கேற்ற சூழ்நிலை உண்டு பண்ணிக் கொள்வது பிரிட்டிஷாரின் பழைய வழக்கம். வகுப்புவாத வெறியைத் தூண்டிவிட்டு தேசத்தில் குழப்பங்களையும் கலகங்களையும் நடத்துவதைவிட நாட்டை கூறுபோட நல்லதொரு சூழ்நிலை வேறு எதுவாக இருந்திருக்கமுடியும்.

### காங்கிரஸ் பலஹீனங்கள்

இரண்டாகப் பிளந்து கிடக்கும் இந்திய உபகண்டத்தின் துரதிர்ஷ்ட நிலைமைக்கு பிரிட்டிஷாரை மட்டிலும் குறைகூறி விடமுடியாது. நாமும் சில அடிப்படை தவறுகளை செய்திருக்கின்றோம். இரண்டும் சேர்ந்து நாட்டை தர்ம சங்கடமான நிலைமையில் சிக்கவைத்து விட்டன. இன்று நாம் வெளியிடும் அபிப்பிராயம் காங்கிரஸ் அன்பர்களுக்கு சற்று ஆச்சரியத்தை உண்டுபண்ணும் என்பது நமக்குத் தெரியும். ஆயினும் சுதந்திரம் அடைந்த பிறகு நம்முடைய பழைய தவறுகளை எண்ணிப் பார்த்து நம் முன்னுள்ள மஹத்தான எதிர்காலத்தில் நாம் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும். இல்லையேல் மேலும் பல சிக்கல்களில் அகப்பட்டுக் கொள்ள நேரிடும். இன்றுள்ள நிலைமைக்கு ஓரளவு காங்கிரஸும் ஜவாப்தாரி என்பது நாம் மறுக்க முடியாத குற்றச் சாட்டு முஸ்லிம் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளுவதைவிட்டு முஸ்லிம்களின் தான் தோன்றி தலைவர்களுடன் ராஜிப்பேசி ஒப்பந்தம் செய்துகொண்டு சுதந்திரத்திற்கு குறுக்குவழி கண்டு பிடிப்பதிலேயே காங்கிரஸ் முனைந்திருந்தது. உண்மையில் 1921-க்கு பிறகு காங்கிரஸ் முஸ்லிம்களை அறவே அலட்சியம் செய்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். தேசப்பற்றும் சுதந்திர ஆர்வமும் கொண்ட முஸ்லிம்கள் எப்பொழுதும் போலவே காங்கிரஸில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்களை பொறுத்து காங்கிரஸுக்கு கவலையிருக்கவில்லை. தேசிய ஸ்தாபனமென்ற ரீதியில் முஸ்லிம்கள், சீக்கியர்களிடையே தேசியத்தைப் பரப்பியிருக்க வேண்டியது காங்கிரஸின் கடமை. ஆனல் காங்கிரஸ் அப்படிச்செய்ய வில்லை.

"குடியில்லா வீடு கோட்டான்களின் வாசஸ்தலம்" என்பார்கள். காங்கிரஸ் அலட்சியம் செய்து கைவிட்ட பிறகு பாமர முஸ்லிம்கள் தலைமையற்று நின்றனர். கேட்பாரற்று நின்ற சமூகக் குதிரைக்கு

மதத்தின் உள் கடிவாளத்தைப் பூட்டி மிஸ்டர் ஜின்னா சவாரி செய்யத் தொடங்கினார். கடிவாளத்தை சுண்டிய பக்கமெல்லாம் பாமர சமூகம் கண்மூடித்தனமாய் ஓடி குப்புற விழுந்து பிடரியை முறித்துக் கொண்டது. மிஸ்டர் ஜின்னாவையோ முஸ்லிம் லீகையோ குறைகூற முடியுமா? மிஸ்டர் ஜின்னா இல்லாவிட்டால் ஏதாவதொரு மாஸ்டர், முஸிலிம் லீக் இல்லாவிட்டால் ஏதாவதொரு மஜ்லிஸ் கண்டிப்பாக தோன்றியேயிருக்கும். கைவிட்டபிறகு அவர்கள் மிஸ்டர் ஜின்னாவை பின்பற்றியதைக் குறித்து குறைகூறுவதில் அர்த்தமில்லை.

நம் தாய் சபையின் பல குழந்தைகளில் ஹிந்து முஸ்லிம் இருவரும் வயதுவந்த இரண்டு குழந்தைகள். ஒரு குழந்தையை பேணி வளர்த்தாள். இன்னொரு குழந்தையை துஷ்ட சகவாசத்தில் விட்டுவிட்டாள். தாயின் அசிரத்தையாலும், சகவாச தோஷத்தாலும் கெட்டுப் போன குழந்தை மீது குற்றம் கற்பிப்பது சரியா?

“ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை” காங்கிரஸின் வேலை திட்டத்தில் இடம் பெற்றிருந்தது வாஸ்தவமே. அதற்காக காங்கிரஸ் பாடுபடவில்லை என்று காங்கிரஸ்காரன் என்ற முறையிலே நாம் நிச்சயமாகச் சொல்லமுடியும்.

முஸ்லிம் சமூகத்தின் மூளை காங்கிரஸுடன் இருந்தது. முஸல்மான்களில் உள்ள அறிவாளிகள், பேச்சாளிகள், அரசியல் ஞானிகள், எழுத்தாளிகள், இலக்கிய வித்துவான்கள், கவிகள் உலமாக்கள் அனைவரும் காங்கிரஸில் இருந்தும், முஸ்லிம்களை தனக்குள் ஐக்கியப்படுத்தும் வேலையில் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. உண்மையில் நல்ல எழுத்தாளிகளோ, பேச்சாளிகளோ ஒருவரும் முஸ்லிம் லீகில் இருக்கவில்லை. இந்நிலையில் காங்கிரஸின் தோல்விக்கு ஒரே ஒரு காரணம் ஸ்தாபனத்திற்குள்ளேயே இருந்து வந்த சச்சரவுகளாகும்.

1937 காங்கிரஸ் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பண்டித நேரு பாமர முஸ்லிம்களுடன் துடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வேலையில் முனைந்தார் என்பது வாஸ்தவமே. வெகு குறுகிய காலத்திற்குள் ஐக்கிய மாகாணத்தில் அவருடைய முயற்சிக்கு பெருமளவு வெற்றியும் கிடைத்தது. அச்சமயம் பண்டித நேருவின் முயற்சியை காங்கிரஸ்காரர்களே முறியடித்தனர் என்பது அனைவருக்கும் தெரியும். முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்க்கும் வேலை தேசீய முஸல்மான்களைமட்டுமே சார்ந்தது என்று அவர்கள் நினைத்தது அவர்களுடைய அடிப்படைத் தவறாகும். தேசீய ஸ்தாபனம் என்ற முறையில் காங்கிரஸிலிருந்த ஹிந்துக்களும் அதில் பங்கெடுத்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். முஸ்லிம் லீக் சமரஸத்திற்கு தயாரில்லை என்று குறை சொல்லப்பட்டதே ஒழிய முஸ்லிம் பொது மக்களுடன் துடர்பு கொள்ள தவறிவிட்டதை உணருவார் யாரும் இருக்கவில்லை.

அவ்வளவு மட்டுமல்ல. லீக் தலைவர்களைவிட்டு சோஷியலிஸ்டுகளின் பேச்சைக் கேட்டு முஸ்லிம் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள பண்டித நேரு முயற்சித்தது தவறு என்று கண்டித்த காங்கிரஸ்காரர்களும் இருக்கத்தான் செய்தனர். முஸ்லிம் பொது மக்களைவிட்டு மிஸ்டர் ஜின்னாவை அணுகியதின் பலன் இன்று நாடு துண்டாடிக் கிடக்கின்றது. வெள்ளையர்கள் வெளியேறிய 24 மணி நேரத்திற்குள் ஹிந்து முஸ்லிம் பிரச்னை தீர்ந்துவிடுமென்று நமது தலைவர்கள் சொல்லி வந்ததற்கு மிஸ்டர் ஜின்னாவையும் அவரது தேச பக்தியையும் அவர்கள் நம்பியிருந்தது தான் காரணம். வகுப்புவாதத்தின் விளைவுகள் என்னவாயிருக்குமென்று நம் தலைவர்கள் எண்ணிப் பார்த்தார்கள் இல்லை. வகுப்புவாத பிற்போக்கு சக்தியை குழி தோண்டிப் புதைக்காமல் வகுப்புவாதி மிஸ்டர் ஜின்னாவை திருப்தி செய்யும் வேலையில் தீவிரமாய் முனைந்தனர். அதன் மூலம் சுதந்திரத்தின் குறுக்குப் பாதையை கண்டு பிடிக்க எண்ணினர். சுதந்திரத்திற்கு குறுக்கு வழியே கிடையாதென்று எண்ணிப் பார்க்கவும் அவர்களுக்கு அவகாசமில்லாமல் போய்விட்டது. மக்களைவிட்டுத் தலைவர்களை தாஜா செய்த தன் பலன் இன்து பிரத்யட்சமாய் பார்க்கின்றோம். பிற்போக்காளர்களுடன் சமரசம் பேசி அவர்களுடைய செல்வாக்கை அதிகரிக்கச் செய்ததும் வகுப்புவாதியை தலைவர் என்று ஒப்புக்கொண்டதும் காங்கிரஸ் செய்த ஹிமாலயத் தவறுதலாகும். பிற்போக்கு சக்திகளையும் தேசீய விரோதிகளையும் முறியடிக்க வேண்டுமே யல்லாது அவர்களுடைய செல்வாக்கு அதிகரிப்பதற்கு ஏதுவான யாதொரு காரியத்தையும் செய்திருக்கலாகாது.

காங்கிரஸின் அவ்வித போக்குக்கு காரணம் இருக்கத்தான் செய்தது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரட்டைக் கொள்கைகளை காங்கிரஸ் அனுசரித்ததே அதற்குக் காரணம். புரட்சி ஸ்தாபனமாக இருந்ததுடன் காங்கிரஸ் நிர்வாகப் பொருப்பையும் ஏற்றுக்கொண்டிருந்தது. புரட்சியின் மூலம் அந்நிய அதிகாரத்தை ஸ்தம்பிக்கச் செய்ததோடு நில்லாமல் அந்நிய அதிகாரத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு

தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்று நிர்வாகப் பொருப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தது. புரட்சி ஸ்தாபனமாக மட்டும் இருந்திருந்தால் எவர்களுடனும் ராஜிப் பேசவோ யாரையும் திருப்தி செய்யவோ காங்கிரஸுக்கு அவசியம் இருந்திருக்காது. புரட்சியின் மூலம் அந்நிய ஆதிக்கத்தை தகர்த்தபிறகு பிற்போக்கு சக்திகளை சுலபமாக முறியடித்திருக்க முடியும். அதைவிட்டு அரைகுறை அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஆட்சி புரிய முற்பட்டதன் காரணத்தால் லீகுடன் சமரஸம் பேசுவது தவிர்க்க முடியாமல் போய்விட்டது. நிர்வாகம் நடத்த லீகுடன் சமரஸம் அவசியமென வெள்ளையர்கள் சொல்லியும் வந்தனர். ஆனால் முஸ்லிம் லீகுக்கு நியாயமாக காங்கிரஸ் விட்டுக் கொடுக்க முன்வந்ததைவிட அதிகமாக வெள்ளையர்கள் லீகுக்கு கொடுத்தும் வந்தனர். இவ்விதம் லீக் கோரிக்கைகள் நாளுக்குநாள் வளர்ந்தன. சரிசமப் பிரதிநிதித்வம் கொடுக்க முன்வந்தும் நாம் லீகை திருப்தி செய்ய முடியாமலே போய்விட்டது.

லீகுடன் சமரஸம் பேசுவது தவிர்க்க முடியாமல் போனதற்கு இன்னொரு காரணம் தனித்தொகுதி முறையாகும். 1916-ல் தனித்தொகுதி முறையை ஒப்புக்கொண்டு நாம் செய்த தவறை நிவர்த்திக்க நல்லதொரு சம்பவமும் நமக்கு வாய்த்திருந்தது. 1935-ம் வருஷ இந்திய சட்டத்தின்போது தனித்தொகுதி விஷத்தை களைந்திருக்கலாம். அந்த சந்தர்ப்பத்தையும் இழந்தோம் அத்துடன் வகுப்புவாரி பிரதிநிதித்வத்தையும் ஏற்றோம். எதற்காக? மந்திரி சபைகளை அமைப்பதற்காக!

அந்நிய ஆட்சியில் அரைகுறை அதிகாரத்தை வைத்துக்கொண்டு மந்திரி சபைகளை அமைத்தால் தேசம் குட்டிச் சுவராகிவிடும் என்று பிரபல காங்கிரஸ் தலைவர் ஒருவர் எச்சரித்ததையும் நாம் புறக்கணித்தோம். தனித்தொகுதி முறையையும் ஆட்சேபித்து 1937 தேர்தல்களில் கலந்து கொள்வதில்லை என்றுமட்டும் நாம் பகிஷ்கரித்திருந்தால், மந்திரி சபைகளை அமைக்கும் ஆசைக்கு இலக்காகாமலிருந்தால் இன்றைய நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும். தனித் தொகுதி விஷம் தன்னுடைய நாசவேலையை செய்து முடித்தபிறகு இன்று நாம் அதற்கு பரிகாரம் தேடுகிறோம். தனித்தொகுதி முறையை ஏற்றோம். ஏன்? வேறு வழியிருக்கவில்லை. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு இசைந்தோம். எதற்காக? மந்திரி சபைகளை அமைப்பதற்காக! முஸ்லிம் லீகை ஒரு ஸ்தாபனம் என்று ஒப்புக்கொண்டோம் சுயராஜ்யத்திற்கு குறுக்கு வழி கண்டு பிடிப்பதற்காக! இடைக்கால சர்க்காரில் அமர்ந்தோம். தவிர்க்க முடியவில்லை என்பதற்காக! முடிவில் இந்திய பிரிவினைக்கும் இசைந்தோம், குழப்பங்களை, கலவரங்களை தவிர்ப்பதற்காக!

சுதந்திர இந்தியாவில் வீரம் மிகுந்த சுதந்திர சமுதாயமாக நாம் வாழப்போகின்றோம். இங்கிலையிலுள்ள நாம் கண்டதுண்டங்களாக வெட்டி வீழ்த்தப்பட்டாலும் அநியாயமான கோரிக்கைக்கு இசைந்தது கௌரவமான செய்கையாகாது. ஒவ்வொரு குழந்தையும் சித்திரவதை செய்து கொல்லப்பட்டாலும், ஒவ்வொரு அங்குல நிலமும் பொசுங்கி சாம்பலாக குவிந்தாலும் நாம் பிரிவினையை ஏற்றிருக்க நியாயமே இல்லை.

அழகான யுவதிகளையும், குழந்தைகளையும் வானளாவிய கட்டிடங்களையும் காப்பாற்ற மார்ஷல் பெட்டைன் புராதன பெருமை வாய்ந்த பிரான்ஸை ஹிட்லரிடம் ஒப்படைத்தார். பிரான்ஸ் தனது கௌரவத்தை இழந்துவிட்டது. ஆனால் ஸ்டாலினோ! பாதி ரஷ்யா அழிந்து தரைமட்டமான பிறகும் ஹிட்லரின் அநியாய கோரிக்கைக்கு அந்த வீரன் இணங்கவில்லை.

ஸ்டாலின் கிராடை ஜெர்மனியர்கள் தரைமட்டமாக்கியதைப்போல் ஏதாவது ஒரு வல்லரசு படையெடுத்து நம் நகரங்களை தகர்க்க ஆரம்பித்தாலதை தவிர்க்க நாட்டையவர்களிடம் ஒப்படைத்துவிட முடியுமா; உலகப் படத்திலிருந்தே துடைக்கப்படுவதாயிருப்பினும் சரி அனியாயத்திற்கு பணியமாட்டோமென்று நவ இந்திய வாலிபர்கள் தீர்மானித்தாகவேண்டும். பலஹீனத்தை போதிக்கும் தலைவர்கள் நமக்குத் தேவையில்லை. தேசம் நமக்குப்பெரிதே யொழிய, தலைவர்களல்ல. வகுப்புவாத பிற்போக்கு சக்திகள் வளர்வதையோ வளர்க்கப்படுவதையோ ஒரு வினாடிக்கேனும் இந்திய வாலிபர்கள் இனி சகித்துக்கொண்டிருக்கப்போவதில்லை.

எனவே அடிமை இந்தியாவில் செய்ததைப் போன்ற தவறுகள் சுதந்திர இந்தியாவில் அதிக தீங்கை விளைவிக்கலாம். காங்கிரஸ்காரர்களாகிய நாம் இனி வகுப்புவாத பிற்போக்கு சக்திகள் வளர்வதையும் வளர்க்கப்படுவதையும் விட்டுவைப்பதன் மூலம் நவ இந்தியா உருவகப்படுத்துவதற்கு முட்டுக்கட்டை இடமளித்துவிடாமல் ஜாக்கிறதையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

# இனி பாகிஸ்தானில் லக்ஷக்கணக்கில் முஸ்லிம்கள் குடியேற முடியாது

## இடவசதி இன்மையே காரணம் —(ஸ்டேட்ஸ்மென்)

சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவும், பாகிஸ்தானும் ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றன. அத்தகைய பயங்கர ஆபத்து சக்தி வாய்ந்த எந்த பெரிய அரசாங்கங்களையும் தரை மட்டமாக்கியிருக்கும். இந்தியா அதை சமாளித்துவிட்டதெனினும், பாகிஸ்தான் பொருத்தவரை சமாளிப்பது துர்லபம் என்றே சொல்ல வேண்டும். பாகிஸ்தானின் இந்த கஷ்டங்களுக்கு கிழக்கு வங்க பாகிஸ்தான் அங்கம் வெகு தொலைவில் இருப்பதால் வட மேற்கு பாகிஸ்தான் அங்கத்திற்கு உதவ முடியவில்லை என்பதையோ, பஞ்சாப் பிரிவினையினால் ஏற்பட்ட துர்க்கதியையோ வியாபாரம், விவசாயம் முடங்கி தேசத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதையோ குவிந்து கிடக்கும் லக்ஷக்கணக்கான அகதிகளையோ காரணம் என்று சொல்ல முடியாது.

லக்ஷக்கண்க்கான அகதிகளுக்கு தங்க விடுதிகள், ஆஸ்பத்திரிகள் தேவையான இதர வசதிகள் செய்து கொடுப்பது பெரிய காரியமில்லை· ஆனால் முதலிலிருந்தே பொருளாதார நெருக்கடிக்குள்ளிருந்து வரும் ஒரு தேசம் மேற்படி வேலைகளை எப்படி செய்து முடிக்கும்?

சில ஆபத்துக்கள் பொதுவாக இரண்டு தேசங்களுக்கும் நேர்ந்தன. தாங்கள் நடத்தப்பட்ட கொடூரத்தினால் முகாம்களில் தங்கிய அகதிகளுக்கிடையே கோபமும் பழிக்குப் பழி எண்ணமும் தலை தூக்கிற்று. தங்களுடைய எதிர்காலத்தை குறித்து சோகமும், வெறுப்பும் கொண்டனர். வேலையின்றி முகாம்களில் கிடந்ததால் அவர்களுடைய வாழ்வில் சோர்வும், சோம்பேறித்தனமும் குடிகொண்டது. பாகிஸ்தான் நிலைமையை யோஜிக்கும்போது 55 லக்ஷம் அகதிகளை பராமரிக்க முன்வந்தது போற்றத் தக்கதே. சமீபத்தில் 6,75,000 அகதிகள் மேலும் எதிர்பார்க்கப்படுகின்றனர். அவர்கள் பாகிஸ்தானுக்கு போய் சேராததால் அநேகமாக போகும் வழியிலேயே ஆபத்திற்குள்ளாயிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. எவ்வித முன்னேற்பாடு மின்றி உலகத்தில் நடைபெறாத இவ்வளவு பெரிய ஜன மாற்றத்தில் 6,75,000 மனிதர்கள் காணமல் போய் விடுவது சகஜமே. இந்த எண்ணிக்கை கொல்லப்பட்டவர்களுடைய எண்ணிக்கையைத் தவிர அனுமத்தாக மறைந்தவர்களுடைய தொகையேயாகும்.

இதுவரையில் கிடைத்த புள்ளி விவரங்களை ஒட்டி 35 லக்ஷம் அகதிகள் மேற்கு பாஞ்சாலத்தில் தாங்களாகவே தங்கிவிட்டார்கள். ஒரு லக்ஷம் அகதிகளுக்கு மேல் சிந்து மாகாணம் போய் சேர்ந்தார்கள். சில ஆயிரம் அகதிகள் எல்லைப்புறம் அடைந்தார்கள். பகவல்பூர் சமஸ்தானம் இரண்டு லக்ஷம் அகதிகளை ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. பாக்கி 20 லக்ஷம் அகதிகள் இதுவரை யாதொரு ஏற்பாடுமின்றி தவித்துக் கொண்டிருக்கின்றனர். நமக்குத் தெரிந்த வரையில் 5 லக்ஷம் அகதிகளை சிந்து மாகாணம் ஏற்கலாம். ஆனால் அது 1½ லக்ஷத்தை மாத்திரம் ஏற்க சம்மதித்திருக்கிறது. பலுஜிஸ்தான் 25,000 அகதிகளையும், எல்லைப்புறம் ஒரு லக்ஷம் அகதிகளையும் ஏற்க முடியும். இந்த புதிய ஏற்பாட்டின்படி ஆறு லக்ஷத்து இருபத்தையாயிரம் அகதிகள்தான் மேற்படி மாகாணங்களில் தங்க முடியும். பாக்கி பதினேழு லக்ஷத்து எழுபத்தையாயிரம் அகதிகள் யாதொரு வசதியுமின்றி அலைவர். மேற்கு பஞ்சாப் இந்த ஆபத்தை எப்படி சமாளிக்கப் போகிறது என்பது தெரியவில்லை. அத்துடன் சிந்து மாகாணம் 5 லக்ஷ அகதிகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் இன்னும் நிலைமை மோசமாகிவிடும். முடிவில் கட்டுப்பாட்டை மீறி சிந்து மாகாணத்தில் அகதிகள் "ஜிஹாத்" கோஷத்துடன் புகுந்து விடுவார்கள்.

### மத்திய அரசாங்கத்தின் உதவி தேவை

மேற்கு பாஞ்சால சர்க்கார் பாகிஸ்தான் மத்திய அரசாங்கத்தினிடம் தனக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை விளக்கி, உதவிவேண்டுமென்றும், உதவியின்றி எவ்வகையிலும் அகதிகளை நிர்வகிக்க முடியாதென்றும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

சாகுபடி நிலங்களை அகதிகளுக்கு பங்கீடு செய்து கொடுப்பதன் மூலம் நெருக்கடியை ஓரளவு சமாளிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நீர்ப்பாசன தொந்தரவுகள் அதிகரித்து அதனால் சர்க்காருக்கு ரெவினியூ வருமானம் குறைந்துவிடும். அத்துடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான

அளவு நிலமும் கிடைக்காது. கிடைத்த அளவு நிலத்தை சாகுபடி செய்து அதன் வருமானத்தால் குடும்ப செலவையும் சமாளித்துக் கொண்டு வரியும் கொடுக்கமுடியாது. வடமேற்கு பாஞ்சாலத்தில் குஜராத், ஜீலம் ஜில்லாக்களில் தரிசு நிலங்கள் இருக்கின்றன. இதுவரை சாகுபடி செய்யாத அந்த நிலங்களை சாகுபடிக்கு லாயக்காக செப்பனிட அகதிகளால் சாத்தியமாகாது. அரசாங்கமும் கலப்பை, வர் போன்ற நவீன சாகுபடி உபகரணங்கள் கொடுக்க வசதியற்று இருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் எட்டு ஏகரா நிலமும், அதற்கு வேண்டிய விதையும் கொடுக்க பாகிஸ்தான் கவர்மெண்டு ஏற்பாடு செய்து வருகிறது. இது எவ்வகையிலும் அகதிகளுக்குத் தேவையான அளவு உதவியில்லை. அங்கிருந்த சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை பணக்காரர்கள் முன்னடியே ஆக்ரமித்துக் கொண்டார்கள். அதனால் கஷ்டப்படும் அகதிகளுக்கும் அவர்களுக்கு மிடையே துவேஷம் பரவி வருகிறது. கிழக்கு பஞ்சாப் அகதிகள் நிலைமை பாகிஸ்தானிலிக்கும் அகதிகளைவிட ஓரளவு திருப்திகரமாக இருந்துவருகிறது. சமீபத்தில் வந்து சேர்ந்திருக்கும் அகதிகளுக்கு மாத்திரமே இதுவரை உதவி செய்யப்படவில்லை.

அகதிகளெல்லாம் விவசாயிகளல்ல. அதில் வியாபாரிகளும் தொழிலாளிகளும் இருக்கின்றனர். அகதிகளிடம் முதல் இல்லாத காரணத்தினால் பெரிய வியாபாரத்தை ஆரம்பிக்கமுடியவில்லை. பாகிஸ்தானில் சிறிய வியாபாரங்களெல்லாம் முஸ்லிம்களே செய்து வந்தனர். வியாபாரம் தெரிந்த அகதிகளுக்கு வியாபாரம் செய்ய வசதியில்லை. நெசவுத் தொழில், தோல் பதனிடும் தொழில், தோலினால் பெட்டி, செருப்பு, பணப்பை மற்றும் பல சாமான்கள் தயாரிக்கும் தொழில் முதலியவை தெரிந்த் தொழிலாளிகள் மிகுதியாக இருப்பதால் கஷ்டப்படுகிறார்கள் கிழக்குப் பாஞ்சாலத்தில் அவர்களுடைய் குறைவினால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

பிரிவினையால் ஹைட்ரோ எலக்ட்ரிகல் ஓர்க்ஸ் என்ற மின்சார உற்பத்தி சாலை இந்தியாவில் சேர்ந்துவிட்டது. பாகிஸ்தானில் இதுவரை மின்சார உற்பத்திக்கு யாதொரு ஏற்பாடும் ஆகவில்லை. எல்லா தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சார உற்பத்திக்காக வகுக்கப்பட்ட ரசூலிஸ்கீம் இதுவரையில் பூர்த்தியாகவில்லை. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு சென்ற தொழிலாளிகள், மேஸ்திரிகள் இஞ்சினியர்களுக்காக டாக்டரிகள் ஏற்படுத்த முயற்சிகள் நடந்தன. ஆனால் அதற்கு முக்கியமான மூலதனம் இல்லாததால் அவர்களுடைய முயற்சிகள் ஈடேரவில்லை. இதையெல்லாம் யோஜித்துத்தான் முஸ்லிம் அகதிகளை பாகிஸ்தான் முதலாளிகள் ரோடுகள் போடுவதற்கும், வாய்க்கால்கள் வெட்டுவதற்கும், பாறைகள் உடைப்பதற்கும் அமர்த்தலாமென்று யோஜித்து வருகின்றனர். இந்த மார்ச் மீ-க்குப் பிறகு அகதி முகாம்களை மூடிவிடலாம் என்றும் அவர்கள் தீர்மானிக்கின்றனர். அதுவும் ஆபத்தாகவே முடியும்.

மேற்கு பஞ்சாலத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த விவசாயிகளின் எண்ணிக்கை 11லக்ஷம். அதற்கு பதிலாக அங்கு போய்ச்சேர்ந்த விவசாயிகளின் எண்ணிக்கை 24-லக்ஷம். குட்காமா, அல்வரிலிருந்து சியால் கோட்டுக்கு போன மேவுபாட்டாணியர்கள் ஒருசிலர் அங்கு தங்கிவிட்டாலும் எஞ்சியிருக்கும் அகதிகள் பரிதாபகரமான நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றனர். இதுவரை அவர்களுக்கு யாதொருவசதியும் செய்யப்படவில்லை. மேற்கு பஞ்சாலத்திலிருக்கும் அகதிகள் அதற்கும் மேற்கே சென்றிருப்பவர்களைவிட சுகமாக வாழ்கின்றார்கள் என்றே சொல்லவேண்டும். சிந்து மாகாணத்தில் பாஞ்சால முஸ்லிம்கள் எவ்வகையிலும் திருப்தியுடன் வசிக்கமாட்டார்கள். சிந்து மாகாணம் அவர்களை பலவித துன்பங்களுக்கு உள்ளாக்கும். எல்லைப்புறத்தில் ஒரு லக்ஷம் அகதிகள் எப்படிப் போய் வசிப்பார்கள் என்பதும் நமக்குத் தெரியவில்லை. பட்டாணியர்களுடைய பாஷை, கலை, கலாச்சாரம் முற்றிலும் வேறுபட்டது. அங்கு எவ்வகையிலும் இவர்கள் தங்க முடியாது. மலைப் பிரதேசங்களில் இந்த பிரதேசத்திலிருந்து போனவர்கள் வாழ்வது அசாத்தியம். ஆயினும் பட்டாணியர்கள் இவர்களை நிலங்களை சீர்படுத்துதல், கல்லுடைத்தல், ரோடு போடுதல், சிறிய பாலங்கள் கட்டுதல் போன்ற வேலைகளுக்கு அமர்த்திக் கொள்ள தயாராய் இருக்கின்றார்கள். இதே காரணங்களினால் பலுஜிஸ்தானிலும் 25,000 அகதிகள் தங்குவது துர்லபம். இன்னும் ஒரு வருஷம் எந்தவிதமான தகராறுகளும், தொல்லைகளும் ஏற்படாமல் இருந்தால் இதுவரையில் போய் சேர்ந்திருக்கும் அகதிகளுக்கு பாகிஸ்தான் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யக்கூடும். ஆனால் தற்சமயம் நிலவிவரும் அதிருப்திகாமான நிலைமையை கவனித்தால் அகதிகள் கஷ்டங்களை சகிக்கமுடியாமல் அங்கு கலகம் விளைவித்துவிடுவார்கள் என்றே தெரிகிறது. மந்திரி சபைகளுக்கு எதிராக முஸ்லிம்கள் கஷ்டநிஷ்டூரங்களை சகியாமல் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர். எனவே பாகிஸ்தானுக்கு தற்சமயம் இருக்கும் ஆபத்தைவிட எதிர் நோக்கி வரும் ஆபத்து பெரிது என்றே சொல்லவேண்டும்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM